அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம்–635 113.

சுற்றறிக்கை எண்:4390/ஏ–5/2025, நாள். 03.09.2025

பொருள் : தேர்வுகள் – அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 2025–2026–ம் கல்வியாண்டில் முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு பயின்று வரும் மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களிடம் **அக்டோபர் 2025** வாரியத் தேர்வுக்கான தேர்வு கட்டணம் வசூலித்தல் – தொடர்பாக.

பார்வை : Academic spell Details for odd Semester 2025.

---

இக்கல்லூரியில் 2025–2026–ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டில் பயின்றுவரும் மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களிடம், எதிர்வரும் அக்டோபர் 2025 வாரியத் தேர்வுக்கான தேர்வுக் கட்டணத்தொகையை சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்து வசூல்செய்து, கீழ்க்காணும் நாட்களுக்குள் பி–1 இருக்கை (கணக்கர்) எழுத்தரிடம் நேரில் செலுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். இப்பணியை சம்மந்தபட்ட துறைத்தலைவர்கள் / துறைத்தலைவர் (பொ) கண்காணித்து ஆசிரியர்களுக்கு உரிய குறிப்புரை வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. அபராதம் ஏதுமின்றி (Without fine) தேர்வுக் கட்டணம் செலுத்த கடைசி நாள். **11.09.2025.**
2. அபராதம் (With fine) ரூ. 150/- உடன் தேர்வுக் கட்டணம் செலுத்த கடைசி நாள். **18.09.2025.**
3. தட்கல் (Takkal fine) ரூ. 750/- உடன் தேர்வுக் கட்டணம் செலுத்த கடைசி நாள். **25.09.2025**

**<u>தேர்வுக் கட்டண விவரம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | பதிவு கட்டணம் (Registration Fees) | = ரூ. 30/– |
| 2. | மதிப்பெண் பட்டியல் கட்டணம் (Marksheet Fee) | = ரூ. 40/– |
| 3. | தேர்வு கட்டணம் (ஒரு தாளுக்கு) (Exam Fee) | = ரூ. 65/– |

..2..

அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும் துறைத்தலைவர்கள்(பொ)–களும் மாணவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய தேர்வுக் கட்டணத் தொகை விவரத்தினை ஏ5 இருக்கை எழுத்தரிடம் மாணவர்களின் Key list விவரங்களுடன் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாணவர்கள் Regular மற்றும் Arrear தேர்வுகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை சரியாக கணக்கிட்டு, அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல்செய்து, பி–1 இருக்கை (கணக்கர்) எழுத்தரிடம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு குறிப்புரை வழங்குமாறும் துறைத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–பா.பெ.கோவிந்தராசு,
முதல்வர் (மு.கூ.பொ.)

பெறுநர்

அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும் துறைத்தலைவர்கள்(பொ) )மாணவர்களின் சுற்றுக்கு / பயிலக வாட்ஸ் அப் குழு மூலம்

நகல் முதல்வரின் மேசைக்கு

நகல் துணை முதல்வர்

நகல் பி–1 இருக்கை எழுத்தர்

நகல் முதல்வரின் நேர்முக உதவியாளர் / பொருளாளர்

நகல் கண்காணிப்பாளர் நிர்வாகம் / கணக்குகள்

நகல் தகவல் பலகைக்கு (பயிலகம் / விடுதிகள்)

நகல் இணையத்தள பொறுப்பாசிரியர் )பயிலக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது

நகல் ஏ–5 இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சி.ஆ.வசந்தா 3/9/25
கண்காணிப்பாளர்

3/9/25